## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

## அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண்.88/2023

**வா.சா.1-** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 23-02-2026

பெயர் = சீனிவாசன்

**வா.சா.-1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) நான் என்ன பரிகாரங்கள் கேட்டு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சந்து என்னுடைய சொந்த சந்து என்றும், மேற்படி சந்தை நோக்கி பிரதிவாதி எவ்வித கட்டுமானமும் ஏற்படுத்தக்கூடாது என்றும், பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு சொத்து சம்மந்தமாக என்னுடைய தாத்தா பாட்டிக்கும், பிரதிவாதியின் அம்மாவுக்கும் இடையில் ஏற்கனவே வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் சொத்து விவரங்கள் , விஸ்தீரணம், தீர்ப்பின் விவரம் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அசல் வழக்கு சொத்தும் அதற்கு மேற்கே உள்ள வீடும் எனது தாத்தா பாட்டியுமான சீனிவாசன்-லெட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்து தற்போது எனக்கு கிடைக்கபெற்றது என்றால் சரிதான்.

(2) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான். அசல் வழக்கு சொத்துவிவரத்தில் சந்தை மட்டும் காண்பித்துள்ளேன் என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழு சொத்துவிவரத்தையும் நான் இவ்வழக்கில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் தாவா சொத்து சந்திற்கு மேற்கே கிழமேல் அடி எத்தனை அடி அளவு இடம் பாத்தியம் என்றும், அதில் எத்தனை அடி அளவிற்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் தாவா சொத்து சந்திற்கு மேற்கே கிழமேல் அடி எத்தனை அடி அளவு இடம் பாத்தியம்

என்றும், அதில் எத்தனை அடி அளவிற்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டு ஏன் சொல்லவில்லை என்றால் அது தேவையில்லை, அதனால் சொல்லவில்லை. மேற்படி வடபுறம், தென்புரம் கிழமேல் அடி அளவுகளையும், அதில் கட்டியுள்ள கட்டிடத்தின் அடி அளவுகளை குறிப்பிட்டால் எனக்கு இவ்வழக்கு பாதகமாக அமையும் என்பதால் தான் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா பாட்டி சீனிவாசன் மற்றும் லெட்சுமியம்மாள் ஆகிய இருவருக்கும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து எவ்வாறு பாத்தியம் என்று காண்பிக்கக்கூடிய ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

(3) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில், சீனிவாசன் மற்றும் லெட்சுமியம்மாள் ஆகியோருக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து எவ்வாறு பாத்தியம் என்று காண்பிக்கக்கூடிய ஆவணத்தை குறிப்பிடவில்லை என்றால் சாட்சி நிரூபண வாக்குமூலத்தை பார்த்துவிட்டு, சரிதான் என்று சாட்சியம் அளித்தார். எனது தாத்தா, பாட்டி ஆகிய இருவருக்கும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து எவ்வாறு பாத்தியம் என்று காண்பிக்கக்கூடிய ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்தேன், மேற்படி ஆவணத்தை பற்றி எனது வழக்கறிஞரிடம் உறுதி செய்யும் பொருட்டு சாட்சி கால அவகாசம் கோரினார்.

வா.சா.1 வேண்டுக்கோளுக்கிணங்க கு.வி தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.23 17:58:40 +0530